1981

# தமிழீழ காவல்துறை

## அமைப்பு விதிகள்

...priate Technolo...
121, POINT-PEDRO ROAD
NALLUR, JA...NA
No. ........

தமிழீழ காவல்துறை

TAMIL EELAM
POLICE

1991

Appropriate Technology Se...
21, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# தமிழீழ தேசிய தலைவர்



# திரு. வே. பிரபாகரன்

# தமிழீழ காவல்துறை

## (அமைப்பு விதிகள்)

01. "தமிழீழ காவல்துறை" என இந்த அமைப்பு அழைக்கப்படும்.

02. தமிழீழ தாயகத்தில் சட்டம், ஒழுங்கைப் பேணிப் பாதுகாப்பதுடன், தமிழீழ மக்களின் நலனுக்கும், நல்வாழ்விற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் தமிழீழ காவல்துறை அயராது உழைக்கும்.

03. (1) தமிழீழ காவல் துறையானது தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் நேரடிப் பொறுப்பின் கீழ் இயங்கும்.

(2) தேசியத் தலைவர், தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் ஒருவரை நியமித்து, அவர் மூலமாக தமிழீழ காவல் துறையை நிர்வகித்து வருவார்.

04. தமிழீழ காவல்துறைக்கென உருவாக்கப்படும் அமைப்பு விதிகளும், நடைமுறைச் சட்ட ஒழுங்கு விதிகளும் "தமிழீழ காவல்துறை அமைப்பு விதிகள்" என அழைக்கப்படும்.

05. தமிழீழத் தாயகத்தின் எந்த எந்தப் பகுதிகளில் காவல்துறைப் பணிமனை அமைக்கப்பட வேண்டுமென தலைவர்

கருதுகின்றாரோ அவ்வப் பகுதிகளில் காவல்துறைப் பணிமனைகள் நிறுவப் படும்.

06. தமிழீழத்தில் தேவையான இடங்களில் காவல்துறைப் பணிமனையை நிறுவவும் அதற்குரிய சட்ட விதிகளைப் பிரயோகிக்கவும், காலத்திற்குக் காலம் இவற்றில் தேவையான மாற்றங்களைச் செய்யவும், காவல்துறையின் அதிகார எல்லையை நிர்ணயிக்கவும் தேசியத் தலைவருக்கு அதிகாரமுண்டு.

07. தமிழீழத் தாயகத்தில் தேவைப்படும் இடங்களில் காவல்துறைக்கு உதவியாக "தொண்டர் படையை" அமைக்கவும், அதற்கான சேவை நிபந்தனைகள், வேலைத் திட்டங்கள் போன்றவற்றை வகுத்துச் செயல்படுத்தவும் தேசியத் தலைவர், காவல்துறைப் பொறுப்பாளருக்கு அனுமதி வழங்கலாம்.

08. தமிழீழத் தாயகத்தில் காவல்துறைப் பணிமனை அமைக்கப்படாத பகுதிகளில் இச்சட்ட விதிகளை முழுமையாகவோ, பகுதியாகவோ அப்பகுதியில் அமுல் செய்ய தேசியத் தலைவருக்கு அதிகாரமுண்டு.

09. (அ) தேசியத் தலைவரின் சம்மதத்துடன் தேவையான காவல்துறை உறுப்பினர்களைத் திரட்டவும், பயிற்சி வழங்கவும், அவர்களுக்குரிய பணிகளை வகுக்கவும் பொறுப்பாளருக்கு அதிகாரம் உண்டு.

(ஆ) காவல்துறையில் பதவித் தரங்களை உருவாக்கவும், பொறுப்புக்களை வழங்கவும் நன் நடத்தை, ஒழுக்கம், திறமை, கட்டுப்பாடு என்பவற்றைப் பேணவும் தேசியத் தலைவர் காலத்திற்குக் காலம் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்.

10. (அ) காவல்துறை உறுப்பினர் ஒவ்வொருவரும் தனது பொறுப்பாளருக்கு விசுவாசமும், மரியாதையும், கீழ்ப்படிவும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) தனது பொறுப்பாளரின் சட்டபூர்வமான சகல கட்டளைகளுக்கும் காவல்துறை உறுப்பினர் இணங்கி ஒழுக வேண்டும்.

11. (அ) காவல்துறை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் முழுநேர சேவையாளர்களாகக் கருதப்படுவர். அவர்களின் பதவிக்குரிய அதிகாரம் தமிழீழம் முழுவதற்கும் செல்லுபடியாகும்.

(ஆ) காவல்துறை உறுப்பினர்களின் கடமை நேரம், ஓய்வு, விடுமுறை போன்றவை "சேவையின் அத்தியாவசிய தன்மையைக்" கருத்திற் கொண்டு காவல் துறைப் பொறுப்பாளரால் தீர்மானிக்கப்படும்.

12. காவல்துறை உறுப்பினர் ஒவ்வொருவரும்;

(1) (அ) தமிழீழத் தேசப்பற்று உடையவராகவும்

(ஆ) கண்ணியம், நேர்மை மிக்கவராகவும்

(இ) புகைப்பிடித்தல், மதுப்பழக்கம் அற்றவராகவும்

(ஈ) இலஞ்சம், ஊழல் என்பவற்றுக்கு உட்படாதவராகவும்

(உ) குற்றச் செயல்கள் எதனுடனும் சம்பந்தப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(2) காவல்துறை உறுப்பினருக்கு எதிரான முறைப்பாடுகள் யாவும் காவல்துறை பொறுப்பாளரால் விசாரணை செய்யப்படும்.

(3) காவல்துறை உறுப்பினர் எவரும் காவல்துறை பொறுப்பாளருக்கு எதிராகவோ அல்லது பணிமனைப் பொறுப்பாளருக்கு எதிராகவோ நீதிமன்ற நடவடிக்கை எடுக்க முடியாது.

13. (அ) நியாயமான காரணமின்றியும் பணிமனைப் பொறுப்பாளரின் எழுத்து மூலம் முன் அனுமதியின்றியும் காவல் துறை உறுப்பினர் எவரும் கடமைக்குச் சமுகமளிக்கத் தவறக் கூடாது.

Appropriate Technology
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

(ஆ) பதவியை விட்டு தாமாக விலக விரும்பும் ஒருவர், மூன்று மாதங்களுக்கு முன்பாக எழுத்து மூல விண்ணப்பத்தை காவல்துறை பொறுப்பாளருக்குச் சமர்ப்பித்து, அது அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே பதவி விலகலாம்.

(இ) பதவி விலகும் உறுப்பினர்கள் தமது பொறுப்பிலுள்ள காவல்துறைக்குச் சொந்தமான ஆயுதங்கள், ஆவணங்கள், உத்தியோகபூர்வ சின்னங்கள் உள்ளிட்ட அனைத்தையும் காவல்துறை பொறுப்பாளரிடம் ஒப்படைத்து, சான்றிதழ் பெற்ற பின்பே விடுவிக்கப்படுவர்.

14. காவல்துறை உறுப்பினரின் பொதுவான கடமைகள்:-

(அ) தமிழீழ மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் பங்கம் ஏற்படாதவாறு பாதுகாப்பது.

(ஆ) தமிழீழ மக்களின் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்ட உழைப்பது.

(இ) குற்றச் செயல்களைத் தடுப்பது.

(ஈ) குற்றவாளிகளையும், சந்தேக நபர்களையும் கைது செய்து நீதியின் முன் நிறுத்துவது.

(உ) சமூக விரோத சக்திகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது.

(ஊ) அதிகாரமுள்ள எந்தப் பொறுப்பாளர்களாலும் சட்டரீதியாக இடப்பட்ட கட்டளைகளையும், பிடியாணைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றுவது.

(எ) நீதிமன்ற நிர்வாகத்திற்கு உதவுவது.

15. சிறப்புக் கடமைகள்:-

தமிழீழத்தின் அவசிய தேவையைக் கருதி, சிறப்புக் கடமையைப் புரியுமாறு

காவல்துறை உறுப்பினர்களுக்குத் தேசி யத் தலைவர் கட்டளையிடலாம்.

16. சிறப்புரிமைகள்:-

(அ) காவல்துறை உறுப்பினர் ஒருவ ருடைய கடமை தொடர்பாக தனிப்பட்ட பொதுமகன் எவரும் அவருக்கு எதி ராக நீதிமன்ற நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது.

(ஆ) கடமையின்போது ஓர் உறுப்பின ருக்கு ஏற்படும் இன்னல்கள், "காவல் துறைக்கு ஏற்பட்ட இன்னல்" ஆக ஏற் றுக்கொள்ளப்பட்டு அதற்குரிய பரி காரங்கள் எடுக்கப்படும்.

(இ) கடமை தொடர்பாக ஓர் உறுப்பி னருக்கு ஏற்படும் செலவினங்கள், இழப் புக்கள் யாவும் காவல்துறையால் நிவர்த்தி செய்யப்படும்.

17. முக்கிய பொறுப்பு:-

காவல்துறை இரகசியங்களைப் பேணிப் பாதுகாப்பதுடன், காவல்துறைக்கு அவ தூறு ஏற்படாவண்ணம் ஒவ்வோர் உறுப்பினரும் மனதாலும் செயலாலும் இதய சுத்தியுடன் சேவையாற்ற வேண் டும்.

18. சிறப்புப் பிரிவுகள்:-

தலைவரின் அங்கீகாரத்துடன் காவல் துறை பொறுப்பாளர் காவல்துறை உறுப்பினர்களிலிருந்து திறமை, தகுதி அடிப்படையில் பின்வரும் சிறப்புப் பிரிவு களை அமைக்கலாம்.

(அ) வீதிப் போக்குவரத்துப் பிரிவு.

(ஆ) குற்றப் புலனாய்வுப் பிரிவு.

(இ) விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு.

19. ஒழுங்கு நடவடிக்கைகள்:-

தமிழீழ காவல்துறை மிகச் சிறந்த ஒழுக் கமும் கட்டுப்பாடுமுடைய உறுப்பினர் களைக் கொண்டதாக விளங்கும்.

(அ) மேற்படி குறிக்கோளுக்கெதி ராகவோ

(ஆ) தமிழீழ காவல்துறை அமைப்பு விதிகளுக்கு முரணாகவோ செயற்படும் எந்த உறுப்பினர் மீதும் காவல்துறை பொறுப்பாளர் உடனடி ஒழுங்கு நட வடிக்கை எடுப்பார்.

## 20. "பராமரிப்பு நிதியம்"

(அ) இந்நிதியம் தமிழீழ காவல்துறையைப் பராமரிப்பதற்கென நிறுவப்படும்.

(ஆ) இந்நிதியம் தொடர்பாக தேவையான சட்ட விதிகளைக் காலத்துக்குக் காலம் தேசியத் தலைவர் பிறப்பிப்பார்'

(இ) தேசியத் தலைவரின் அங்கீகாரத்துடன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளரால் நியமிக்கப்படும் ஒருவர், இந் நிதியத்துக்குப் பொறுப்பாக இருப்பார்.

(ஈ) குற்றங்களுக்கு அபராதமாகப் பெறப்படும் நிதி "இந் நிதியத்தினு ள் சேர்க்கப்படும்.

(உ) இந்நிதியத்திற்கு பொதுமக்களும் பங்களிப்புச் செய்யலாம்.

★

Api iate Technology Services
CDT • PEDRO ROAD
ALLUR, JAFFNA
No.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Appropriate Techn
121, POINT-
NALLUR,
No